# Gospel Truth

# காஸ்பல் ட்ரூத்

**உலகளாவிய திருச்சபைகளின் ஊக்குவிப்பிற்கான வேதாகம விளக்கங்கள்**

ISSUE - 11 – FOR PRIVATE CIRCULATION ONLY – இதழ் - 11


## யார் பெரியவன் ?

சீஷர்கள் தங்களுக்குள்ளே எவன் பெரியவன் என்று தர்க்கம் பண்ணினதைக் குறித்து சொல்லப்பட்ட வசனங்களை போதனைக்கு எடுத்துக் கொள்வோம்: லூக் 22 : 24 – 27; மாற்கு 9 : 33–36 ; மத் 18 : 1–4).

அவர் கப்பர்நகூமுக்கு வந்து, வீட்டிலே இருக்கும்போது சீஷர்களை நோக்கி : நீங்கள் வழியிலே எதைக்குறித்து உங்களுக்குள் தர்க்கம் பண்ணினீர்கள் (மாற் 9 : 34) என்று கேட்டார்.

சீஷர்கள் அவருடைய ராஜ்யம் இந்த பூமிக்குரியதல்ல.அது ஆவிக்குரிய ராஜ்யம் என்று இன்னும் அறியா திருந்தார்கள் (லூக் 17 : 21 ; ரோமர் 14 : 17).

சீஷர்கள் தொடர்ந்து தேவனுடைய ராஜ்யத்திலே யாருக்கு உயர்ந்த அதிகாரம் கிடைக்கும் என்று தர்க்கம் பண்ணிக்கொண்டே இருந்தனர். நிச்சயமாக நான்தான் பெரியவன் என்று மற்றொரு சீஷனும், இல்லை இல்லை நான்தான் மூத்தவன்.ஆகவே நான்தான் பெரியவன் என்று மற்றொரு சீஷனும் கூறினார். இன்னொருவன் கூறினார் இல்லை, ஜனங்களை நடத்துவதில் அதிக அனுபவம் எனக்கிருப்பதினால் நான்தான் பெரியவன். நீங்கள் எல்லாரும் கூறுவது தவறு என்று கோபத்துடன் ஒரு சத்தம், நான் மிகவும் படித்தவன். ஞானமுள்ளவன். ஆகவே உங்களைக் காட்டிலும் நான்தான்



பெரியவன். நிறுத்துங்கள், நான்தான் வெகுநாட்களாக கிறிஸ்துவுடன் கூட இருக்கிறேன். நான்தான் முதலில் அவரை பின்பற்றியவன். ஆகவே நான்தான் பெரியவன். தங்களுடைய அதிகாரத்துக்கும், பதவிக்கும் போட்டி போட்டுக்கொண்டு தங்களுடைய சத்தத்தை உயர்த்தி வாக்குவாதம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். நிச்சயமாக அவர்கள் ஒவ்வொருவரும் தங்களோடு உள்ள மற்ற சீஷனுக்கு அதிகாரம் கிடைப்பதை விரும்பவில்லை.

அதிலே இன்னொரு சீஷன் என் குடும்பம் இஸ்ரவேலருக்குள்ளே மிகவும் கனம் பெற்றது. ஆகவே நான்தான் பெரியவன் என்றான்.பின்பு இயேசு தம் சீஷர்களிடம் வழியிலே நீங்கள் எதைக் குறித்து உங்களுக் குள்ளே தர்க்கம் பண்ணினீர்கள் என்றார் (மாற்கு 9 : 33). எதைக்குறித்து வாக்குவாதம் உண்டாயிற்று என்றார் (லூக் 22:24).

மேட்டிமையும்,பெருமையும், கர்வமும் நிறைந்த அவர்களுடைய இருதயத்தை இயேசு அறிந்து யார் உண்மையிலே பெரியவன் என்று போதிக்கலானார்.

ஒரு சிறுபிள்ளையை எடுத்து, அதை அவர்கள் நடுவிலே நிறுத்தி, அதை அணைத்துக் கொண்டு, இந்த சிறு பிள்ளையைப் போல தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோக ராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான் (மத்தேயு 18 : 4).


| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி | பாதங்கழுவுதல் | கேள்விக்கென்ன பதில் | உங்களுக்குத் தெரியுமா? |
|---|---|---|---|---|
| பக்கம் - 3 | பக்கம் - 4 | பக்கம் - 5 - 6 | பக்கம் - 7 | பக்கம் - 8 |

# வேதாகமம்




## நமக்கு போதிப்பது என்ன.....

**தேவனுடைய வார்த்தை**

2தீமோ 3:16-17; 2பேது 1:20-21;

மத் 24:35

**அன்பு**

மத் 22:37-40; யோவா 14:21-23,

1 யோவா 4:7-11

**மனந்திரும்புதல்:**

அப் 3:19; 17:30; 2கொரி 7:10

**புதுசிருஷ்டி**

யோவா 3:3-7; 2கொரி 5:17; ரோம 6:1-4,

எபே 2 :1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**

1 யோவா 5:18; மத் 1:21 ; யோவா 8: 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**

அப் 1:8; 15:8-9; 19:2

**பரிசுத்தம்:**

லூக் 1:73-75; எபி 12:14; 1பேது 1:15-16;

தீத்து 2: 11-12; ரோம 6:22

**தேவனுடைய இராஜ்யம்**

லூக் 17:20-21; ரோம 14:17; யோவா 18:36.

**சபை-** அப் 2:47; எபே 4:4-6;

1கொரி 12 :12-13; கொலோ 1:18

**ஒற்றுமை**

யோ 17 : 20-23; கலா 3:28;

வெளி 18:2-4

**நியமங்கள்**

மத் 28:19-20; 26:26-30;

1கொரி 11 :23-27; யோவா 13:14-17

**தெய்வீக சுகமளிப்பு**

லூக் 4:18, ஏசா 53 :4,5, யாக் 5 :13-16

**விவாக முறைமை**

மத் 19:5-6; லூக் 16 :18; ரோம 7:2-3;

1கொரி 7:10, 11

**வெளிப்புற தோற்றம்**

1தீமோ 2:9-10; 1கொரி 11 :14-15;

உபா 22 :5

**கடைசிகாலம்**

2பேது 3 : 7-12 ; யோவா 5 :28,29;

2கொரி 5 :10; மத் 25 :31-46

**தொழுதுகொள்ளுதல்**

யோவா 4: 23,24; எபே 5 :19;

2கொரி 3 :17

**சுவிசேஷம் அறிவித்தல்**

மாற் 16:15

எவனாகிலும் முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் கடையனானவனும் ஊழியக்காரனுமாயிருக்கக்கடவன் (மாற்கு 9:35). புறஜாதியாரின் ராஜாக்கள் அவர்களை ஆளுகிறார்கள். உங்களுக்குள்ளே அப்படியிருக்ககூடாது;

உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன் (லூக் 22 : 25- 26). மாம்சீக இச்சைக்கும், மேட்டிமைக்கும் ஒருபோதும் தேவபிள்ளைகள் இடங்கொடுக்கலாகாது. இந்த உலகில் பல ஊழியர்கள் மேட்டிமையின் உச்சத்திலும், பதவியின் பிடியிலும் வாழ்ந்து வருகிறார்கள். ஜனங்கள் தங்களுக்கு கீழ்ப்படிந்து மரியாதை தருவதை அவர்கள் விரும்புகிறார்கள்.

அவர்கள் கடவுளைப்போல ஆட்சி செய்ய விரும்புகின்றனர். மற்றவர்களைக் காட்டிலும் தங்களை மேன்மையாக எண்ண வாஞ்சிக்கிறார்கள். சில தேவ ஊழியர்களும், பல பெயர்க் கிறிஸ்தவர்களும் தங்களுடைய, வயது, அனுபவம், கல்வி குடும்பம் அல்லது அந்தஸ்து இவற்றினிமித்தமாக தங்களுக்கென தனி மரியாதைக்கும், அதிகாரத்துக்கும் பிரியப்படுகிறார்கள். பணிவிடைக்காரராகவும், ஊழியராகவும் சேவை செய்து கிறிஸ்துவின் தன்மையை அவர் நமக்கு காட்டி சென்றிருக்கிறார்.

யார் பெரியவன்? மேட்டிமையின்றி எந்த ஒரு ஆணோ (அ) பெண்ணோ, சிறுபிள்ளையைப்போல தன்னை தாழ்த்தி தேவனுக்கு ஊழியம் செய்கிறார்களோ அவர்களே கிறிஸ்துவுக்குள் பெரியவர்கள். யார் பெரியவன் என்பது ஆளுமை திறனில் மாறாக பணிவிடை செய்யும் ஆவியில் உள்ளது. ஆகவே ஒவ்வொரு தேவபிள்ளையும், தேவனுடைய ஊழியக்காரரும் சத்தியத்தின்படி நடந்து கனத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.


## காஸ்பல் ட்ரூத்

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். கிறிஸ்துவின் நாட்கள் தொடங்கி அப்போஸ்தலர்கள் காலமட்டும் பிரசங்கித்து வந்த கிறிஸ்துவின் சத்தியத்தையே நாங்களும் இந்த இதழ் வாயிலாக அறிவிக்கிறோம்.*

*கர்த்தரின் வசனமே விசுவாசத்திற்கு ஊன்றுகோலாகும். அதுவே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பையும் நமக்குத் தருகிறது. பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும், வல்லமையும், அனுதின வாழ்வின் பரிசுத்தமும் நம்மில் வளர வழி வகுக்கிறது. சத்தியத்தின்படி அன்பை போதித்து கர்த்தருக்குள் வழி நடத்த பிரயாசப்படுகிறோம்.*

## இணையதள சேவை

*எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** என்ற *இணையதள முகவரியை பார்க்கவும். மேலும் உங்களது* **E.mail** *மூலமாகவும் எங்களோடு தொடர்பு கொள்ளலாம். உங்களது நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.*

## தொடர்புக்கு

*தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். தேவ சபையின் மூலமாய் நடைபெறும் அனைத்து வகையான ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.*



**ஆசிரியர். டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி**
**பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**



# ஆசிரியரின் தலையங்கம்

வெகு மனத்தாழ்மையோடு நான் கர்த்தரை சேவித்தேன் (அப்போ 20 : 19) .

சத்தியத்துக்கு தூணும், ஆதாரமுமாய் இருந்து சாட்சியாக ஜீவித்து கடந்து சென்ற அநேக பரிசுத்தவான்களை கர்த்தர் தந்தமைக்கு அவருக்கு நன்றி. மாம்சீக இச்சைகளால் தூண்டப்பட்டு பெருமை கொண்ட சந்ததியாரின் உள்ளம் சுயநலம் நிறைந்த கனவுகளையும், குறிக்கோளையும் கொண்டது. இது இந்த மாம்சீக உலகத்திற்கு மாத்திரமல்ல பல தேவ ஊழியர்கள் சுயநலமும் , மேட்டிமையும் உடையவர்களாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மனிதர்களை திருப்திபடுத்துவதற்காகவும், பொறாமையின் நிமித்தமும் பதவிக்கு ஆசைப்படும் ஊழியக்காரர்களின் நிலையை எண்ணும் போது மிகவும் மோசமாக உள்ளது.

இன்னொரு புறம், மனத்தாழ்மையோடு எந்தவித எதிர்ப்பார்ப்பும் இல்லாமல் தேவனுக்கென்று ஓடிக்கொண்டிருக்கும் ஊழியர்களை காண்பது மகிழ்ச்சியளிக்கிறது. இயேசுவின் குணாதிசயங்களில் ஒன்றான மனத்தாழ்மையை கற்று நடக்கும் அநேகர் நம் தேவசபையில் இருப்பது நமக்கு ஆசீர்வாதமாகும். ஒரு பதவிக்காக வாக்குவாதமும், மூர்க்கமும் ஏற்படும் போது அங்கே மாம்ச இச்சையையும், மேட்டிமையையும் காணமுடிகிறது. சுவிசேஷ ஊழியத்தில் நல்ல போதகர் ஒருவருக்கு மனத்தாழ்மை என்பதே மிக முக்கியம்.

இந்த இதழில் நாம் பாதங்கழுவுதல் குறித்து காண இருக்கிறோம். ஒருவருடைய கால்களை இன்னொருவர் கழுவுதல் என்பது மனத்தாழ்மையை குறிக்கிறது. தேவ பிள்ளைகளின் ஐக்கியத்தில் இந்த பாதங்கழுவுதலின் நிமித்தம் தாழ்வு மனப்பான்மை உருவாகிறது. மாம்சீகமாக பாதங்கழுவுதல் என்பது மாம்ச மனத்தாழ்மை அலல அதற்கான ஆவிக்குரிய பெலன் மிகுதியாய் உண்டு.

பலவிதமான மனிதர்களின் மாறுபட்ட இயல்புகளும் எண்ணங்களும் பல நேரங்களில் பிரச்சனைக்கும், குழப்பத்திற்கும் காரணமாய் அமைந்து வருகிறது. நமக்கும் மற்றவர்களுக்கும் உள்ள பல்வேறு பிரச்சனைகளுக்கு மனத்தாழ்மை என்பது ஒரு தீர்வாக அமைகிறது. இதினிமித்தம் “நான் தவறு செய்து விட்டேன்” அல்லது “என்னை மன்னித்து விடு” போன்றதான வார்த்தைகளைக் கூறி மற்றவர்களோடு உள்ள உறவிலே ஐக்கியப்பட்டு விடலாம். ஒருவேளை நாம் சரியாகவே செய்திருந்தாலும் கூட ஆவிக்குரியவர்களாகிய நம்மில் பொறுமை மிகவும் அவசியம். எப்போதாவது ஒரு கூட்டத்திலோ (அ) ஐக்கியத்திலோ பிரச்சனைகள் இருக்குமேயானால் பாதங்கழுவுதலின் மூலம் நாம் தேவனிடத்திலிருந்து மனத்தாழ்மையை இன்னும் அதிகமாய் கற்றுக் கொள்ளமுடியும்.

மனத்தாழ்மையோடு விசுவாசத்தில் உறுதியாய் இருப்பது நல்லது. சில ஜனங்கள் அவர்களுடைய பதவியினைப் பொறுத்து, தங்களை கர்வமிக்கவர்களாய் காட்டிக் கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.நாம் தேவபிள்ளைகளிடத்திலே ஒருபோதும் கர்வங்கொண்டவர்களாய் நடந்துகொள்ள கூடாது என்பதிலே கவனமாய் இருக்க வேண்டும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு கிறிஸ்துவின் மனத்தாழ்மையைக் குறித்த உபதேசத்தை போதகர் ஐக்கிய கூட்டத்திலே நான் பிரசங்கித்தேன்.ஆனால் வந்திருந்த போதகர்களுக்கு அந்த உபதேசத்தில் பிரியமில்லை.ஏனெனில் தங்களுடைய ஊழியத்திலே ஜனங்களுக்கு தலைவராக இருக்க வேண்டிய தங்களுக்கு தாழ்வு என்கிற ஒரு காரியம் ஏற்புடையதாக இல்லை. உண்மையான தேவபிள்ளைகள் அவ்வாறு இருக்கலாகாது.நம்முடைய நோக்கமும், அழைப்பும், இருதயமும், மனமும் மனத்தாழ்மையுள்ள தேவஊழியன் என்று எண்ண வேண்டும்.

பாதங்கழுவுதல் என்கிற நிகழ்வின் வழியாக, கிறிஸ்துவின் வழியாக, கிறிஸ்துவின் மனத்தாழ்மையின் ஆவி நமக்குள்ளும் வாசமாயிருந்து நம்மை எல்லா சூழ்நிலைகளிலும் பொறுமையாய் இருக்க செய்கிறது.

ஆன்லைனில்

அதிகமாக
தெரிந்துகொள்ள

www.thegospeltruth.org



## நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்

(மத்தேயு 23 : 1- 12)

மனுஷரால் மேன்மைப் படுத்தப்படவும், கௌவுரவிக் கப்படவும் பரிசேயர்கள் விரும்பினார்கள். அவர்கள் தலைமைத்துவத்தின் பெருமையில் திளைத்திருந்தார்கள். இயேசு தம் சீஷர்களிடம் அவரை அவர்கள் ரபி என்றோ போதகர் என்றோ அழைக்கப்படக்கூடாது என்றார். ஏனெனில் கிறிஸ்துவே ஒரே தலைவரும், போதகரும், பரலோகத்தின் பிதாவானவர் நம் தகப்பனுமானவர் அவரே.

ஊழியர்கள் தேவனுடைய சரீரமாகிய சபையிலே பலவிதமான பதவிகளை (போதகர், பிஷப், ஆர்ச் பிஷப் ஆயர் ....) வகித்தாலும் தலைமைத்துவம் பெற்றுவிட முடியாது.

படிநிலை ஊழியங்கள் புதிய ஏற்பாட்டு சபைகளில் காணப்படவில்லை. போதகர்களிடையே நாம் அனைவரும் தேவனுடைய பணியை செய்ய அழைக்கப்பட்ட வேலையாட்கள் என்கிற சமத்துவத்தன்மை காணப்பட்டது. கிறிஸ்துவின் வார்த்தையில் எல்லாரும் சகோதரர் என்பதே.

# வேதாகம வழிகாட்டி

## பொருள் : பாதங்கழுவுதல்

**வேத வாசிப்பு**

பாதங்கழுவுதல் : ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள் – யோவான் 13 : 14

**விளக்கம்**

இயேசுகிறிஸ்து பாதங்கழுவுதலுக்கென மாதிரியை நமக்காக செய்து காண்பித்திருக்கிறார். தேவனுடைய பரிசுத்தவான்கள் அனைவரும் ஊழியர்களே. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலே இருக்கவேண்டிய மனத்தாழ்மையையும், சமத்துவப்பண்பையும் எடுத்துக் காட்டவே பாதங்கழுவுதலை இயேசுகிறிஸ்து செய்து காட்டினார் (யோவான் 13 : 1–17).

**I. கிறிஸ்துவால் போதிக்கப்பட்டது**

A. யோவான் 13 : 1–5 இயேசு சீஷர்களுடைய பாதங்களை கழுவினார்

**II. கிறிஸ்துவின் கட்டளை**

A. மத்தேயு 28 : 20 நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும்

B. யோவான் 13 : 14

1. வேண்டும் : பிணைப்பு, செய்
2. லூக் 18 : 1, அப்போ 5 : 29, 1 யோவான் 4 : 11 பார்க்க

**III. கிறிஸ்து மாதிரியை காண்பித்தார்**

யோவான் 13 : 15 நான் உங்களுக்குச் செய்ததுபோல

**IV. அப்போஸ்தல சபையில் பழக்கப்படுத்தப்பட்டது**

A. யோவான் 13 : 8 கிறிஸ்துவில் ஐக்கியம்

B. 1 தீமோ 5 : 9 –10 விதவை

**V. மனத்தாழ்மை**

A. யோவான் 13 : 16 ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல.

B. பிலிப்பியர் 2 : 3–7 கிறிஸ்துவின் சிந்தை

C. மத்தேயு 18 : 1–4 மனந்திரும்பி, பிள்ளையைப் போல் ஆகுங்கள்.

D. 1 பேது 5 : 3–5 மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்.

**VI. ஊழியக்காரனாக அழைக்கப்பட்டீர்கள்**

A. லூக் 22 : 24 –27 தலைவன் பணி விடைக்காரனைப்போலவும் இருக்க கடவன்

B. கலா 5 : 13 அன்பினாலே ஒருவருக் கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்

**VII. சகோதரத்துவம்**

A. மத் 23 : 8–12 நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசு வுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்

B. கலா 3 : 28 நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்

**VII. கீழ்ப்படிதலின் ஆசீர்வாதம்**

A. யோவான் 13 : 17 பாக்கியவான்களாயிருப்பீர்கள்

B. ஏசாயா 1 : 19 தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள்

**முடிவு :**

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.

– பிலிப்பியர் 2 : 5 – 7



# பாதங்கழுவுதல் எனும் கட்டளை

## ஒருநோக்கு வேதாகம செய்தி

**வேதாகம தொகுதி**

(யோவான் 13 : 1-17) இயேசு பந்தியை விட்டெழுந்து, தம்மை சூழ்ந்து உட்கார்ந்திருந்த சீஷர்களைப் பார்த்தார்.அவர்கள் போஜனம் பண்ணி முடித்து, கடந்த ஒவ்வொன்றையும் நினைவுபடுத்தி சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். இன்னும் சில மணி நேரத்தில், மனித குலத்தின் மீட்புக்காக தாம் சிலுவையில் அடிக்கப்படும்படியாய் ஒப்புக் கொடுக்கப்பட போகிறோம் என அறிந்திருந்தார். தேவனோடு உள்ள உறவை பெலப்படுத்தும் படியாய் இந்த கடைசி போஜன வேளையானது, சீஷர்களுக்கு அவர் ஒரு மாதிரியை காண்பிக்கும்படியான பிரதானமான வேளையாக அமைந்தது.

**இயேசு தம் சீஷர்களின் பாதத்தைக் கழுவினார்**

அன்பு நிறைந்த உள்ளத்தோடு இயேசு தம் வஸ்திரங்களைக் கழற்றி வைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக் கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார். ஒவ்வொருவராய் கழுவினபின்பு, யூதாஸ் காரியோத்தினிடத்திற்கு வந்தார். அவன் தன்னைக் காட்டிக்கொடுப்பவன் என இயேசுவானவர் அறிந்திருந்தும் கூட அன்போடும் மனத் தாழ்மையோடும் தன்னைக் காட்டிக்கொடுப்ப வனுடைய கால்களையும் கழுவினார்.



**நான் உங்களுக்கு செய்தது போல நீங்களும் மற்றவர்களுக்கு செய்யும்படி மாதிரியை செய்து காட்டினேன்**

**பாதங்கழுவுதலின் அடையாளம்**

அவர் திரும்ப உட்கார்ந்து, அவர் செய்ததைக் குறித்து அவர்களுக்கு விளக்கி கூறினார்.நீங்கள் என்னைப் போதகரென்றும் ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள்,நீங்கள் சொல்லுகிறது சரியே.நான் அவர்தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியை காண்பித்தேன்.மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்கு சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல (யோவான் 13 : 13-16).

**வழக்கத்திற்கு மாறானது**

வேதாகம நாட்களில், பாதங்கழுவுதல் என்பது பொதுவான வழக்கமாயிருந்தது. சுற்றுபுற சூழ்நிலை களால் வீட்டுக்கு வருகிற விருந்தாளிகளின் பாதங்களை வேலைக்காரர்களைக் கொண்டு கழுவுவது வழக்கம். அதுபோல அழுக்கை நீக்கும் படியாய் இயேசு தம் சீஷர்களின் பாதங்களை கழுவவில்லை. இயேசு பேதுருவிடம், நான் செய்கிறது இன்ன தென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் நீ அறிவாய் என்றார் ( யோவான் 13 : 7 ). ஆழமான ஆவிக்குரிய அர்த்தமுள்ள ஒரு கட்டளையை தன் சபை பின்பற்றும்படியாக கிறிஸ்து உணர்த்தியிருக்கிறார்.

**கிறிஸ்துவின் கட்டளை**

நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் ( மத் 28 : 20 ). பாதங்கழுவுதல் என்கிற கட்டளையை இயேசு நமக்கு தந்திருக்கிறார்.

அது அவரது கட்டளை.ஆகவே அதை நிர்ணயிக்கப்பட்ட வழக்கங்களில் ஒன்றாக எண்ண வேண்டாம். இயேசு கூறுகிறார் நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். வேண்டும் என்கிற வார்த்தைக்கு கிரேக்க மொழியில் வேண்டியது, பிணைப்பு என்று அர்த்தம்.

சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் ( லூக் 18 : 1 ).மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது (அப்போ 5 : 29).

நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம் ( 1 யோவான் 4 : 11 ). தேவபிள்ளைகளாகிய நாம் ஒருவருடைய பாதங்களை ஒருவர் கழுவக் கடமைப்பட்டுள்ளோம்.மேலும் அவர் நமக்கென்று ஒரு மாதிரியை காண்பித்து சென்றிருக்கிறார்.

**சபையில் பழக்கப்படுத்தப்பட்டது**

பல சபைகளில் கிறிஸ்து கற்பித்த இராப்போஜனம் பின்பற்றப்படுகிறது. ஆனால் பாதங்கழுவுதல் பின்பற்றப்படுவதில்லை. பல ஜனங்கள் மற்றவர்களுடைய கால்களைக் கழுவுவதில் பிரியப்படுவதில்லை.ஆகவே அதை நியாயப்படுத்த முயற்சிக்கிறார்கள்.பாதங்கழுவுதலை கிறிஸ்து இயேசு செய்துகாட்டியது மாத்திரமல்ல அப்போஸ்தல சபையிலும் அது பின்பற்றப்பட்டது ..... பரிசுத்தவான்களுடைய கால்களைக் கழுவி.... அப்படிப்பட்ட விதவையையே விதவைகள் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் (1 தீமோ 5 : 10).ஜனங்கள் இதை செய்ய மறுப்பது, தேவனுடைய வசனத்திற்கு கீழ்ப்படியாதிருப்பதையே காட்டுகிறது.

**தாழ்மையின் மாதிரி**

இயேசு இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தா, அவர்தம் ஜனங்களுக்காக தாழ்மையின் குணத்தை எடுத்துக் காட்டினார்.தம்மிடத்தில் அன்பாயிருந்து, தம்மை பின்பற்றிய சீஷர்களுடைய பாதங்களை மாத்திரமல்ல, துரோகியாய் தம்மை காட்டிக்கொடுக்கப் போகிற மனிதனுடைய கால்களையும் கூட கழுவி, தாழ்மையின் குணத்தை தரித்தார்.கிறிஸ்து இயேசுவிலிருந்த அந்த தாழ்மையின் சிந்தை, இன்று பதவிக்காக ஓடிக்கொண்டிருக்கும் அநேக தேவ ஊழியர்களிடத்திலே இல்லை. தேவ சபையில் இருக்கும் போதகர்களும், ஊழியர்களும் அப்போஸ்தலர்களும் கிறிஸ்துவை விட பெரியவர்களல்ல. நீங்கள் ...அப்படியிருக்கக்கூடாது ...தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன் (லூக் 22 : 25 -27).

**பாதங்கழுவுதல் குறித்த ஆவிக்குரிய விளக்கம்**

ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமை யினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே



ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையா னவர்களாக எண்ணக்கடவீர்கள். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்ககடவது.அவர் தம்மைத்தாமே வெறுமை யாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார் ( பிலிப்பியர் 2 : 3-7 ). மற்றவர்களுடைய பாதங்களை கழுவுதல் என்பது தாழ்மையைக் குறிக்கிறது. பரிசுத்தவான்களாகிய தேவபிள்ளைகளுக்குள் இருக்க வேண்டிய ஆவியின் அடையாளம் அது.

நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்படிந்து, மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள் ( 1 பேது 5 : 5 ). அவருடைய கட்டளைகளை ஒவ்வொரு நாளும் பின்பற்றுவது போல, பாதங்கழுவுதல் கிறிஸ்தவர்களின் வாழ்வில் கடைபிடிக்கப்பட வேண்டிய ஒன்று.

**கீழ்ப்படிதலின் ஆசீர்வாதங்கள்**

இயேசுகிறிஸ்து மாம்சீகமாக ஒருவருடைய கால்களைக் கழுவுதலைக் கொண்டு ஆவிக்குரிய சிந்தையான மனத்தாழ்மை, பணிவிடை செய்தல், சகோதரத்துவதன்மை, சுயமற்றதன்மை ஆகியவற்றை நமக்கு நினைப்பூட்டுகிறார். ஆவிக்குரிய வாழ்வில் தன் வார்த்தைக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு பரிபூரணமான ஆசீர்வாதங்கள் உண்டு. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியால், இவைகளை செய்வீர்களானால், பாக்கியவான் களாயிருப்பீர்கள் (யோவான் 13 : 17).

# கேள்விக்கு என்ன பதில்?

**பாதங்கழுவுதல் எப்போதெல்லாம் கடைபிடிக்கப்பட வேண்டும்?**
யோவான் 13ம் அதிகாரத்தில் இயேசு தம் சீஷர்களுக்கு மாதிரியை செய்து காண்பித்து அதன்படி செய்யுங்கள் என்றார். இந்த கட்டளையானது குறிப்பிட்ட இவ்வாறெல்லாம் கடைபிடிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்படவில்லை. எப்போதுமே ஒரு கட்டளை என்பது ஆவிக்குரிய அடையாளம். தினமும் அல்லது வாரந்தோறும், மாதந்தோறும் கடைபிடிக்கப்படுமேயானாலும் அது சடங்காச்சாரமாக இல்லாமல் ஆவிக்குரிய விதமாக இருக்க வேண்டும்.

பல பரிசுத்தவான்கள் வருட நிறைவு சிறப்பு ஆராதனைகளில் இதைக் கடைபிடிப்பதுண்டு.சில கூட்டத்தார் பரிசுத்தவான்களின் பாதங்களை கழுவுதலை இயேசுகிறிஸ்துவின் மாதிரியை நினைவுகூரும்படியாய் செய்கிறார்கள்.

கடந்து வந்ததை நினைவுகூர்ந்து இயேசு தம் சீஷர்களுக்கு பாதங்கழுவியதும், இராப்போஜனம் கொடுத்ததும் ஒரு கட்டளையே.அது அவருடைய சிலுவைப்பாடுகளையும் மரணத்தையும் நினைவுகூரும்படி அருளப்பட்டது. ஆகவே கர்த்தருடைய இராப்போஜனத்தின் போதே பாதங்கழுவுதலும் கடைபிடிக்கப்பட வேண்டியதே. எப்போதெல்லாம் கட்டளைகளை நினைவு கூருகிறோம் என்பதைவிட எவ்வாறு பின்பற்றுகிறோம் என்பதே மேலானது.

**ஆண்களும், பெண்களும் ஒவ்வொருவருடைய பாதங்களை கழுவலாமா?**
வேதாகமத்தில் லூக் 7 : 37 – 39 ல் ஒரு சம்பவம் சொல்லப்பட்டுள்ளது. ஒரு பாவியான ஸ்திரீ இயேசு கிறிஸ்துவின் பாதத்தை தன் கண்ணீரால் நனைத்து, துடைக்கிறாள்

இயேசுகிறிஸ்துவை கனம்பண்ணுகிற ஒரு செயலை தான் அந்த ஸ்திரீ அங்கே செய்தாள்.இச்செயல் நம்முடைய முறைமையின் ஒழுங்காய் முன்னரே ஆயத்தம் செய்த செயல் அல்ல. ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையிலான சமூக ரீதியிலான ஒழுங்குகளும்,




தடைகளையும் கருத்தில் கொண்டு ஆவிக்குரிய ஆராதனையில் ஒழுங்குபடுத்தப்பட்ட பாதங்கழுவுதலை அங்கிகரிக்கலாம்.

சில இடங்களில் வீட்டார் முன்னிலையில் ஒரு பெண் தன் வீட்டிற்கு வரும் விருந்தினரை பாதங்கழுவி வரவேற்பது வழக்கமாயிருக்கிறது. இது இயேசுகிறிஸ்துவுக்கு அந்த ஸ்திரீ செய்ததை போன்றது.

இது கலாச்சார ஒழுங்குதானே தவிர பரிசுத்தவான்களின் பாதங்கழுவுதல் அல்ல.

இந்த சம்பவத்தைக் கருத்தில்கொண்டு

1 கொரி 14 : 40 ல் சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது. ஆகவே ஆண்கள் ஆண்களுடைய பாதங்களைக் கழுவவும், பெண்கள் பெண்களுடைய பாதங்களைக் கழுவவும் அறிவுறுத்தப் படுகிறார்கள்.

**பாதங்கழுவுதல் ஆராதனையின் போது ஒருவர் கூடியிருக்கிற அனைவருடைய கால்களையும் கழுவ வேண்டுமா?**
இயேசுகிறிஸ்து, அங்கு கூடியிருந்த சீஷர்கள் ஒவ்வொருவருடைய பாதங்களையும் கழுவினார்.

நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள் (யோவான் 13 : 14) என்று கூறினார்.

ஒருவர் ஒரு பெரிய கூட்டத்தில் அனைவருடைய பாதங்களையும் கழுவுவது இயலாத ஒன்று.நாம் முழங்கால்படியிடுவதும், பிறருடைய பாதங்களைக் கழுவுவதும் ஆவிக்குரிய தாழ்மையை வெளிப்படுத்துகிறது.

ஒருவர் மற்றொருவருடைய பாதத்தை கழுவவும், அவர் வேறொருவருடைய பாதத்தை கழுவவும், இவ்வாறாக அனைவரும் கழுவியும் கழுவப்பட்டும் இருப்பதை காட்டுகிறது.

ஆகவேதான் ஒவ்வொருவருடைய பாதங்களையும் கழுவவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide
Indian Constitution Act 25th & 19(1) Section

**TAMIL EDITION**




வரலாற்றிலே கிறிஸ்தவர்கள் பாதங்கழுவுதல் ஒழுங்கை அனுசரித்து வந்ததற்கான ஆதாரங்கள் உள்ளது.அகஸ்டின் (கிறிஸ்துவின் காலத்தில் 400 வது ஆண்டில்) சடங்காச்சார முறையாக இதை வலியுறுத்தினார்.இந்த பழக்கம் தெற்கு ஐரோப்பிய நாடுகளில் நான்காவது மற்றும் ஏழாவது நூற்றாண்டுகளில் மிகவும் பிரசித்திபெற்றது.ஞானஸ்நான கோட்பாடற்றவர்களும் கூட 16வது நூற்றாண்டிலே இந்த கட்டளையை ஏற்றுக்கொண்டார்கள்.

19 வது நூற்றாண்டுகளில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் பல சபைகளில் பாதங்கழுவுதல் பின்பற்றப்பட்டது.தெற்கு இந்தியானாவில் ஆபிரகாம் லிங்கன் சிறுவனாய் இருக்கும்போது அவர் போகின்ற சபையில் பாதங்கழுவுதலுக்கென்று தண்ணீரையும் பாத்திரத்தையும் ஆயத்தம் செய்திருக்கிறார்.

( பிரவுன் சார்லஸ் (1947 ).அப்போஸ்தல சபை )

*ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை*

## கிறிஸ்துவின் ஊழியன்

**இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய பவுல்- ரோமர் 1:1**

உண்மையான தேவஊழியர்கள் அழைக்கப்பட்டவர்களும் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்களுமாவர்.அவர்கள் தேவஆவியானவரின் ஏவுதலின்படி அவருடைய சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி அழைக்கப்பட்டவர்கள்.பவுல் தன்னை தேவனுடைய ஊழியக்காரனாய் உறுதிப்படுத்திக்கொண்டார்.அவர் கிறிஸ்துவை தன் எஜமானாக ஏற்றுக்கொண்டார்.தன் சுயபலத்தால் ஒன்றுமில்லை.எஜமானனுடைய வார்த்தைக்கு கட்டுப்பட்டு அவருக்கு ஊழியஞ்செய்கிற ஊழியன் என்று எண்ணினார்.



ஒரு வேலைக்காரன் பணிந்து, தன் எஜமானனுக்கு பணிவிடை செய்யும்போது, அதன் பலன் எஜமானனைச் சேரும்.அதேபோல் தேவன் தன்னுடைய ராஜ்யத்திலே ஒரு ஊழியக்காரனை ஆசீர்வதித்து, அபிஷேகிக்கும்போது அதன் கனமும், மகிமையும், மேன்மையும் அவருக்கே சொந்தம்.ஒரு தேவனுடைய ஊழியர் ஒருபோதும் தன் சுயபலத்தையோ அல்லது பணியையோ குறித்து ஒருபோதும் மேன்மை பாராட்டலாகாது.ஏனெனில் நாம் அவருடைய ஊழியர்.

சில நேரங்களில் எஜமானன், தன் ஊழியரிடத்திலிருந்து எதிர்பார்த்த கனிகள் எதுவும் கிடைக்கவில்லை என வருந்துவதும் சில நேரங்களில் நாம் ஜெபித்த பல ஜெபவிண்ணப்பங்களுக்கு பதில் இல்லாமல் போவதுண்டு.ஊழியரின் சில முடியாமையின் காரணங்களால் அந்த சுமை அவர்களையே சார்ந்தது. நீங்கள் தைரியமாய் நான் தேவனுடைய ஊழியன் என்று சொல்லுங்கள்

தேவனுடைய வல்லமையினாலும், கிருபையினாலும் ஏற்ற நேரத்தில் அவருடைய வழியிலே அதற்கான பலன் நமக்குண்டு.அர்ப்பணிக்கப்பட்ட கீழ்ப்படிதலுள்ள உண்மையான தேவஊழியனாய் இருக்கும்போது தேவனிடத்தினின்று அதற்கான பெலன் வராமல் போவதில்லை.நம் தலைகளை உயர்த்தி, தாழ்மையாக தேவசித்தம் நிறைவேற்றுகிற இயேசுகிறிஸ்துவின் பணியாளனாக, ஊழியனாக வாழ்வோம்.

**தொடர்புக்கு:-**

ஆசிரியர்,
காஸ்பல் ட்ருத்
தேவசபை வெளியீடு
2/227 – கோலார்பட்டி
பொள்ளாச்சி வட்டம்
தென் இந்தியா - 642 107

The Editor,
Gospel Truth,
Church of God Publication
2/227 - Kolarpatti
Pollachi Taluk
South India - 642 107.

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

Tamil Editor : W.S.Vedha, Church of God, 2/227 Kolarpatti, Pollachi -Taluk,South.India - 642 107.
Phone : 04259 - 280488 Cell: 95975 62641
Publisher : V.Jayanathan Gnanarajan, Mailing : V.Selvam, Despatch : V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316